யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 07
First Term Examination – 2020 – Grade 07

விஞ்ஞானம்	34	T	I, II	இரண்டு மணித்தியாலம் Two Hours

சுட்டெண் Index No

விஞ்ஞானம்

பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. தாவர வேர்களில் வேர்ச்சிறுகணுக்கள் காணப்படக்கூடிய தாவரம் அல்லாதது எது?

   1. அகத்தி 2. ஓர்க்கிட் 3. தொட்டாற்சிணுங்கி 4. போஞ்சி

2. நிலக்கீழ்த்தண்டிற்கு உதாரணமாக அமைவது

   1. தென்னை 2. முந்திரிகை 3. சேம்பு 4. கரும்பு

3. தணக்கு வித்துக்கள் பரம்பலடையும் காரணி

   1. காற்று 2. நீர்

   3. விலங்கு 4. அதிர்ந்து வெடித்தல்

4. சில பொருட்கள் உரோஞ்சப்படும் போது அவை பாரம் குறைந்த பொருட்களை கவருகின்றன எனக் கூறிய விஞ்ஞானி

   1. டால்டன் 2. பிராங்ளின் 3. மென்டல் 4. கில்பர்ட்

5. ஒத்த நிலை மின்னேற்றத்தைக் கொண்ட பொருட்களிடையே

   1. ஒன்றையொன்று கவரும் 3. ஒன்றையொன்று கவர்ந்து பின் தள்ளும்

   2. ஒன்றையொன்று தள்ளும் 4. மாற்றம் நடைபெறாது

6. கொள்ளளவியினுள் சேமித்து வைக்கக்கூடிய ஏற்றத்தின் அலகு

   1. பரட்டு 2. அம்பியர் 3. வோல்ற்று 4. வாற்று

7. தைனமோவின் சுழலும் வேகம் அதிகரிக்கும் போது பிறப்பிக்கப்படும் மின்னின் அளவு?

   1. குறையும் 2. குறைந்து கூடும் 3. அதிகரிக்கும் 4. மாற்றமில்லை

8. உடலில் மேலதிகமாக உள்ளெடுக்கப்படும் புரதத்திற்கு யாது நடைபெறும்?

   1. ஈரலில் சேமிக்கப்படும் 2. குருதியினுள் சேர்க்கப்படும்

   3. யூரியாவாக மாற்றப்படும் 4. கொழுப்பாக மாற்றப்படும்

9. ஆணிவேர்த் தொகுதி காணப்படாதது

   1. குப்பைமேனி 2. மாமரம் 3. கறிவேப்பிலை 4. பனை

www.lkedu.lk

10. தாழை மரத்தில் காணப்படும் வேர்

1. காற்றுக்குரிய வேர் 2. ஏறும் வேர் 3. மிண்டிவேர் 4. தாங்கும் வேர்

11. தனியிலையின் இலைப்பரப்பு பகுதியாகப் பிரிக்கப்பட்டிருப்பதற்கு உதாரணம்

1. மரவள்ளி 2. தேமா 3. அகத்தி 4. புளி

12. பூவின் பெண்ணகத்தின் பகுதி அல்லாதது.

1. குறி 2. இழை 3. தம்பம் 4. சூலகம்

13. கடல்நீரில் அதிகளவு கரைந்துள்ள உப்பு

1. சோடியம் காபனேற் 2. கல்சியம் காபனேற்

3. சோடியம் நைத்திரேற்று 4. சோடியம் குளோரைட்டு

14. சிவப்புபாசிச்சாயத்தாளை நீலநிறமாக மாற்றுவது

1. சுண்ணாம்பு நீர் 2. தோடம்பழச்சாறு 3. வினாகிரி 4. உப்பு கரைசல்

15. மின்னோட்டம் பாயும் திசையை இனங்காண பயன்படும் உபகரணம்

1. அம்பியர்மானி 2. மையப்பூச்சிய அம்பியர்மானி

3. மின்மாணி 4. வோல்ற்மாணி

16. சூரிய ஒளியை பயன்படுத்தி மின்னை உற்பத்தி செய்வது

1. சூரியப்படல் 2. டைனமோ 3. மின்மோட்டார் 4. நீர்ச்சில்லு

17. நிலைமின்னேற்றத்தை இனங்காணப்பயன்படும் உபகரணம்

1. காந்தம் 2. கண்ணாடிக்குவளை

3. பொன்னிலை மின்காட்டி 4. உலர்மின்கலம்

18. மின்னோட்டத்தின் சர்வதேச அலகு

1. மில்லி அம்பியர் 2. அம்பியர் 3. வோல்ற் 4. ஓம்

19. பொய்க்கோலம் பூணும் விலங்குக்கு உதாரணமாக அமையாதது.

1. அந்துப்பூச்சி 2. தத்துவெட்டி 3. மயிர்க்கொட்டி 4. தேனீ

20. முலையூட்டியாகக் கருதக்கூடியது

1. அணில் 2. சிட்டுக்குருவி 3. ஓணான் 4. கழுகு

(1 x 20 = 20 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி – II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. A) 1. பின்வரும் தாவரங்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
(முள்ளங்கி, ஈரப்பலா, சைப்பிரஸ், வெற்றிலை, புளி, கிண்ணை, செவ்வரத்தை, கித்துள்)

a. பூக்களை தோற்றுவிக்காத தாவரம் ……...

b. சேமிப்பு வேரைக் கொண்ட தாவரம் ……..

c. பதிய முறை இனப்பெருக்க வேரைக் கொண்ட தாவரம் ……..

d. மூச்சுவேரைக் கொண்ட தாவரம் ……..

e. ஏறும் வேர்களைக் கொண்ட தாவரம் ……..

f. கிளை கொண்ட தண்டைக் கொண்ட தாவரம் ……..

g. காற்றுக்குரிய தண்டுகளினுள் உணவு சேமிப்பைக் கொண்ட தாவரம் ……..

h. கூட்டிலை கொண்ட தாவரம் ……..

(8 x 2 = 16 புள்ளிகள்)

B) i. நிலை மின்னேற்றம் என்றால் என்ன?

ii. நிலை மின்னேற்றம் பயன்படும் சந்தர்ப்பம் 2 தருக?

(2 x 2 = 4 புள்ளிகள்)

02. A) 1. ஆய்வுகூடத்தில் உங்களால் உருவாக்கப்பட்ட எளிய மின்கலம் ஒன்றினை அமைக்க தேவையான பொருட்களை பட்டியற்படுத்துக.

ii. அதனை மையப்பூச்சிய கல்வனோமாணி ஒன்றுடன் இணைத்தபோது உமது அவதானம் யாது? அமைப்பை வரைந்து பெயரிடுக?

iii. இவ் எளிய மின்கலத்தில் காணப்படும் குறைபாடுகள் 2 தருக?


iv. வர்த்தகச் சந்தையில் கைக்கடிகாரத்திற்கு பயன்படுத்தப்படும் மின்கலம் ஆக்கப்பட்டுள்ள பதார்த்தங்கள் எவை?

v. மின்கலம் ஒன்றை குறித்துக் காட்டப்படும் குறியீட்டை தருக?

(5 x 2 = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

B) தரம் 7 மாணவர்களால் செய்யப்பட்ட அமைப்பு காட்டப்பட்டுள்ளது.



i. அவ்வமைப்பின் நோக்கம் யாது?

ii. இச்செயற்பாட்டின் போது உமது அவதானம் யாது?

iii. மேலே காட்டப்பட்ட நீரின் இயல்பு பயன்படும் சந்தர்ப்பம் 2 தருக?

iv. நீர் மேலே கூறிய நீரின் இயல்பு தவிர வேறு 2 இயல்புகள் எவை?

v. நீரில் வாழும் மீன்கள் சுவாசத்திற்காக நீரில் கரைந்துள்ள ஒட்சிசனை பயன்படுத்துகின்றன. இதற்கு காரணமான நீரின் இயல்பைக் குறிப்பிடுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

03. அமில, மூல, நடுநிலை இயல்பைக்காட்டும் மூன்று கரைசல் A, B, C என பெயரிடப்பட்டுள்ளன. இவற்றில் நீல, சிவப்பு பாசிச்சாயத்தாள் இடப்பட்டபோது கிடைத்த நிறங்கள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

	நீலப்பாசிச்சாயத்தாள்	சிவப்பு பாசிச்சாயத்தாள்
A கரைசல்	சிவப்பு	சிவப்பு
B கரைசல்	நீலம்	சிவப்பு
C கரைசல்	நீலம்	நீலம்

i. அமில இயல்பைக்காட்டும் கரைசல் எது?

ii. மூல இயல்பைக் காட்டும் கரைசல் எது?

iii. நடுநிலை இயல்பைக்காட்டும் கரைசல் எது?

iv. இதில் ஒரு பாத்திரத்தினுள் தூய நீர் இடப்பட்டிருந்தால் அப்பாத்திரத்தினை குறிக்கும் ஆங்கில எழுத்து யாது?

v. ஆய்வுகூடத்தில் காணப்படும் 2 அமிலங்களிற்கு உதாரணம் தருக?

vi. ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் காட்டிகள் 2 தருக?

vii. பினோதப்தலினுடன் இளஞ்சிவப்பு நிறத்தை தருவது எந்தக் கரைசல் ஆகும்?

viii. இயற்கை சூழலிலுள்ள சாறுகளை காட்டிகளாகப் பயன்படுத்தலாம். அவ்வாறான காட்டிகளுக்கு உதாரணம் 5 தருக?

ix. ஆய்வுகூடத்திலுள்ள pH தாளின் நிறம் என்ன?

(20 புள்ளிகள்)

www.ikeduLK

04. i. முள்ளந்தண்டுளிகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?


ii. பொய்க்கோலம் என்றால் என்ன?

iii. பொய்கோலம் பூணும் விலங்குகளுக்கு உதாரணம் 2 தருக?

iv. பறவைகளின் உடலமைப்பு அருவிக்கோட்டு வடிவமாக இருப்பதன் அனுகூலம் என்ன?

(10 புள்ளிகள்)

v. இருகிளைச்சாவியைப் பூர்த்தி செய்க



(10 புள்ளிகள்)

www.lkedu.lk